# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 25/26

2011 பிறந்தவர்கள் பின்வரும் 10 குறள்களையும் ஒப்பித்தல் வேண்டும். விரும்பிய 2 குறள்களின் பொருள் விளக்கம் கூறுதல்.

1. **காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
   **ஞாலத்தின் மாணப் பெரிது.** (குறள் 102)

   ஒருவர் தக்க காலத்தில் செய்த நன்மையானது சிறியதாக இருந்தாலும் அது இவ்வுலகத்தை விட மிகப் பெரியதாகக் கருதப்படும்.

2. **கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
   **நிற்க அதற்குத் தக.** (குறள் 391)

   ஐயங்கள் ஏதுமின்றித் தெளிவாகக் கல்வி கற்க வேண்டும். கற்றதற்கு ஏற்ப, நாம் நடந்து கொள்ள வேண்டும்.

3. **ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
   **உயிரினும் ஓம்பப் படும்.** (குறள் 131)

   ஒழுக்கம் மேன்மையைத் தருவதால், உயிரினும் மேலானதாக ஒழுக்கத்தைப் பேணல் வேண்டும்.

4. **மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
   **அற்றது போற்றி உணின்.** (குறள் 942)

   உண்ட உணவு செரித்த தன்மை ஆராய்ந்து போற்றிய பிறகு தக்க அளவு உண்டால், உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

5. **அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
   **பண்பும் பயனும் அது.** (குறள் 45)

   குடும்ப வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கு இடையிலும் அன்பும் அறம் செய்யும் குணமும் இருக்குமானால், அதுவே அவ்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும்.

**வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை

**6. விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே**
**பசும்புல் தலைகாண்பது அரிது.** (குறள் 16)

வானிலிருந்து மழை பெய்யாவிட்டால் இவ்வுலகில் பசுமையான புல்லின் நுனியைக் கூடக் காணமுடியாது.

**7. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்**
**கோல்நோக்கி வாழுங் குடி.** (குறள் 542)

உலகத்து உயிர்களெல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன. அதுபோல மக்கள் அரசனது நல்லாட்சியை நோக்கி வாழ்கின்றனர்.

8. **கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.** (குறள் 400)

அழிவு இல்லாத நிலையான செல்வம் கல்வி. அதை விடச் சிறந்த செல்லம் வேறு எதுவும் இல்லை

**9. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது.** (குறள் 103)

பயன் எதையும் எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவியின் தன்மையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

**10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு.** (குறள் 80)

அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் உள்ள இந்த உடம்பு. அன்பு இல்லையென்றால் இந்த உடம்பு வெறும் எலும்பின் மேல் தோலைப் போர்த்தியது போன்றது ஆகும்.

**வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை